FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

Under Section 173 BNSS (Under ~~Section 154 Cr.P.C.~~) (கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8069056

1. District : The Nilgiris PS: V & AC Year: 2026 FIR No.: 2 Date: 10.06.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PC Act, 1988 as Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: amended by PC Sections பிரிவுகள்: 7.
(iii) Act சட்டம்: (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : Prior to 04.06.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை at 15.30 hrs.
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 05.06.2026 Time : 11.00 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 05.06.2026 நேரம் 11.00 hrs.

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typed complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Joint-1 Sub Registrar office, Udhagamandalam at about 1.5 km South.

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. K. Sivakumar (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Special (g) Address :
தொழில் முகவரி District Inquiry Cell Office, Udhagamandalam.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) Tr. R. Ramesh, Assistant i/c Sub Registrar. O/o the Joint-1 Sub Registrar office, Udhagamandalam.
2) Tr. R. Nageshwaran, S/o Raju, 3/152, Othanatty Aruvankadu, The Nilgiris

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் (Private Individual)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் தகவல் அறிக்கை குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

10/6/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

10/6/2026

15. Date & Time of despatch to the court: 10.06.2026 18.10 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் A.T. Jai Kumar
Rank: நிலை DSP ..... No. எண் .....
VE AC. YK Nilgiris.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.2/2026/AC/Nl, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

நீலகிரி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரியும் அ.தி.ஜெய் குமார் ஆகிய நான், 05.06.2026-ம் தேதி அலுவலில் இருந்தபோது, திரு.K.சிவக்குமார், சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நீலகிரி மாவட்டம் என்பவர் காலை சுமார் 11.00 மணிக்கு நிலையம் ஆஜராகி ஒரு எழுத்து மூலமான புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விவரத்தை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்திற்கு தகவல் தெரிவித்ததன் அடிப்படையில், இன்று 10.06.2026-ம் தேதி சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அனுமதியின் பேரில், மேற்படி புகாரின்மீது நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.2/2026/AC/Nl, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன் கீழ் 17.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த புகார் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் K.சிவக்குமார், துணை மேலாளர் / தனி வட்டாட்சியர், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், உதகமண்டலம், சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி. ஐயா, பொருள்: திடீர் சோதனை – எண்-1 இணை சார்பதிவாளர் அலுவலகம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம் – நடவடிக்கை எடுக்க கோருதல் – தொடர்பாக. நான் நீலகிரி மாவட்டம், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தில் துணை மேலாளர் /

தனிவட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் என்னை சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக உத்தரவு எண்.A1/Pdl.30/2026, நாள்:04.06.2026-ன்படி நியமித்திருந்தார். எனக்கு உதகமண்டலம், எண்.1 இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவு, திருமண பதிவு மற்றும் சார்பதிவாளர் அலுவலக பணிகளுக்கு வரும் நபர்களிடம், உதகமண்டலம் 1 எண் இணை சார்பதிவாளர் திரு.R.ரமேஷ் அவர்கள், தான் செய்து கொடுக்கும் பணிகளுக்கு பத்திர எழுத்தர்கள் மற்றும் இடை தரகர்கள் மூலம் கையூட்டு பெறுவதாக நம்பகமான ரகசிய தகவல் கிடைக்கப்பெற்றது. நான் நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் காவல் குழுவினருடன் 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம் சென்று, சார்பதிவாளரிடம் எங்களை அறிமுகம் செய்துகொண்டு, அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்ய வந்திருக்கும் விபரம் தெரிவித்து, மாலை சுமார் 15.30 மணியிலிருந்து இரவு சுமார் 22.30 மணிவரை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. திடீர் சோதனையின்போது, சார்பதிவாளரிடம் விசாரித்தபோது, தனது பெயர் R.ரமேஷ் என்றும், தான் உதவியாளர் நிலையில் 01.06.2025-ம் தேதி முதல் பொறுப்பு சார்பதிவாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அப்போது அவரை சோதனை செய்ய முற்பட திடீரென இருக்கையில் இருந்து எழுந்து அவருக்கு இடது புறமாக இருந்த டைனிங் அறைக்கு வேகமாக சென்றார். அவரை தொடர்ந்து நானும், காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் காவலர்கள் சென்றபோது, சார்பதிவாளர் திரு.ரமேஷ் தனது வலதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து கத்தையாக பணத்தை எடுத்து அந்த அறையில் நின்றுகொண்டிருந்த நபரிடம் கொடுக்க முயன்றார். அப்போது அவரிடமிருந்து பணத்தை கைப்பற்றி எண்ணிப்பார்த்தபோது, அதில் 500 ரூபாய் தாள்கள் 12

எண்ணிக்கையில் மொத்தம் ரூ.6,000/- இருந்தது. அந்த பணம் குறித்து சார்பதிவாளரிடம் விளக்கம் கேட்டபோது, தனது குழந்தை விளையாடுவதற்கு சிறிய அளலிலான பைக் வாங்க வைத்துள்ளதாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாததால், அந்த பணம் பத்திர பதிவு செய்ய வருபவர்களிடம் கையூட்டாக பெற்ற பணமாக இருக்ககூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் ரூ.6,000/- செயல்முறை நடவடிக்கையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன்பின் அவரிடம் சோதனை செய்தபோது, அவர் தனது வலது பின்பக்க பாக்கெட்டிலிருந்த பர்ஸிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை எண்ணிப்பார்த்தபோது பணம் ரூ.2,960/- இருந்தது. அது குறித்து திரு.ரமேஷ் அவர்களிடம் விளக்கம் கேட்டபோது, தான் வீட்டிற்கு மளிகை பொருள்கள் வாங்க செலவிற்கு கொண்டு வந்த பணம் என்று தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாததால், அந்த பணம் பத்திர பதிவு செய்ய வருபவர்களிடம் கையூட்டாக பெற்ற பணமாக இருக்ககூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் ரூ.2,960/-ஐ செயல்முறை நடவடிக்கையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. சார்பதிவாளரிடம் 04.06.2026-ம் தேதி பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் குறித்து கேட்டதற்கு, கிரைய ஆவணம்-6, தான செட்டில்மென்ட் ஆவணம்-1, MOD-2, மற்றும் ரசீதுகள்-2 என 11 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும், அதில் 2 ஆவணங்கள் நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்து ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள விவரத்தை கணினியிலிருந்து பிர்ண்ட் எடுத்து ஆஜர் செய்தார். பின்னர் அதை பார்வையிட்டு சார்பதிவாளர் அவர்களின் சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அன்றைய தினம் அரசு கணக்கில் வசூலான தொகை குறித்து கேட்க, கணினியிலிருந்து

பிரிண்ட் எடுத்து **"A"** கணக்கு தலைப்பின் கீழ் ரூ.34,13,736/-, **"D"** கணக்கு தலைப்பின் கீழ் ரூ.3,393/-, **"CD"** கணக்கு தலைப்பின் கீழ் ரூ.1,100/-, **"Sub-Division"** கணக்கு தலைப்பின் கீழ் ரூ.2,500/-, **Section 41 & 42 of Indian Stamp Act**-ன் கீழ் ரூ.1,17,84,315/-என மொத்தம் ரூ.1,52,05,044/- ஆன்லைன் மூலம் அரசு கணக்கில் வசூலான விவரத்தை தெரிவித்தார். பின்னர் அதை பார்வையிட்டு சார்பதிவாளர் அவர்களின் சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் பின்னர் சார்பதிவாளர் பணம் கொடுக்க முயன்ற டைனிங் ஹாலில் இருந்த நபரிடம் விசாரிக்கப்பட்டது. அவர் தனது பெயர் **R.**மகேஸ்வரன் என்றும், தனக்கு சார்பதிவாளர் திரு.ரமேஷ் அவர்களை சுமார் ஒரு வருடத்திற்கு மேலாக தெரியும் என்றும், அதனால் அவரை பார்க்க வந்ததாகவும் தெரிவித்தார். மேலும் அவர் செய்யும் தொழிலையோ முகவரியையோ தெரிவிக்க மறுத்துவிட்டார். இருப்பினும் அவரை சோதனை செய்தபோது அவரது வலதுபக்க பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த ஆதார் கார்டு எண்.9439 5947 6869-ன் நகல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரை சோதனை செய்தபோது, பேண்டின் இடது பக்க பின்பாக்கெட்டில் இருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை நான் எண்ணிப்பார்த்தபோது 500 ரூபாய் நோட்டுக்கள் 7 எண்ணிக்கையிலும், 100 ரூபாய் நோட்டு ஒன்றும், 50 ரூபாய் நோட்டுக்கள் 2 எண்ணிக்கையில் ஆக மொத்தம் ரூ.3,700/- இருந்தது. திரு.மகேஸ்வரன் அவர்களிடம் விளக்கம் கேட்டதற்கு, அவர் எந்தவித முகாந்திரமும் கூறாததாலும், அவர் நின்றுகொண்டிருந்த இடம் அலுவலக **CCTV**-ன் கேமராவில் பதிவாகாத இடம் என்பதாலும் அந்த பணம் சார்பதிவாளருக்கு கொடுப்பதற்காகவோ அல்லது சார்பதிவாளர் அறிவுறுத்தலின் பேரில் வாங்கி வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அந்த பணம் ரூ.3,700/- விசாரணைக்காக

செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது டைனிங் ஹாலில் இருந்த சார்பதிவாளர் திரு.ரமேஷ் அவர்களின் **shoulder bag**–ன் முதலாவது அறையில் உள்பக்கத்தில் சிறிதாக உள்ள அறையில் 500 ரூபாய் தாள்கள் 74 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.37,000/– இருந்தது. அந்த பணம் குறித்து சார்பதிவாளரிடம் விளக்கம் கேட்டபோது, அதற்கு சரியான முகாந்திரம் கூறாததாலும், அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனி நபர் பணம் கையிருப்பு பதிவேட்டில் சார்பதிவாளர் திரு.ரமேஷ் அவர்களின் பெயருக்கு எதிரே, 04.06.2026–ம் தேதி பணம் குறித்து எந்த பதிவுகளும் மேற்கொள்ளாததால், அந்த பணம் பத்திர பதிவு செய்ய வருபவர்களிடம் கையூட்டாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் ரூ.37,000/– ஐ செயல்முறை நடவடிக்கையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.49,660/–, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் திடீர் சோதனை செயல்முறை நடவடிக்கை ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். சம்மந்தப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். உதகமண்டலம், 05.06.2026. ஒப்பம் திரு.K.சிவக்குமார் 05.06.2026 சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நீலகிரி மாவட்டம். Submitted: I have received a complaint from Tr.K.Sivakumar, Deputy Manager / Special Tahsildar, Tamil Nadu Arasu Cable TV Limited., Udhagamandalam / Special District Inspection Cell Officer, Nilgiris District on 05.06.2026, and after getting instructions from the Directorate of Vigilance and Anti–Corruption, Chennai, registered a case in Nilgiris Vigilance and Anti–Corruption Cr.No.2/2026 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 today, 10.06.2026 at 17.00 hrs. Sd

XXXX 10.06.2026 Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, The Nilgiris.

The original FIR, along with the written complaint of Tr.K.Sivakumar, Deputy Manager / Special Tahsildar, Tamil Nadu Arasu Cable TV Limited., Udhagamandalam / Special District Inspection Cell Officer, Nilgiris District, is being submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Udhagamandalam. A copy of the FIR is also being submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

10.06.26

Deputy Superintendent of Police
Vigilance and Anti Corruption
The Nilgiris, Udhagamandalam